முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1673

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
   கலியிடர்களை வெல்ல வந்த தேசிகா போற்றி
   ஆறுமுகன் என்அவதார ஞானியே
   அரங்கனே போற்றி போற்றி என சுப்ரமணியர் யானும் அருளியே
2. வரமென அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 15 ம் நாள், 28.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் குரோதி தகர்திங்கள் தன்னில்
   தன்னிலே அரங்கனுக்கு சக்தியூட்டி
   தக்கபடி தண்டாயுதன் யான் பெருந்துணை புரிந்து வருகின்றேன்
3. ஆக்கமுடன் அரங்கனுக்கு ஆற்றல்கூட்டுவேன்
   அனுதினம் ஆறுமுகன் என்சக்தியாலே
   அரங்கர் ஆக்கம் கூடி எழுந்தமர்ந்து
   உலகோர்க்கு அருளக்கூடிய வல்லமையும் சூட்சுமமும் அருளுவேன்
4. சூட்சுமம்பட அரங்கனை தொடர்ந்து வரும்
   மக்கள்கள் அத்துனை பேருக்கும்
   துரிதகதி ஞானசித்தி உறுதிசெய்து
   வருங்காலங்களில் அவர்களெல்லாம்
5. அரங்கன் தேடலில் ஞானப்படைகளாக வல்லமைகூடிய ஞானிகளாகவும்
   ஆக்கம்கூடி ஆறுமுகன் அவதார நோக்கமாக
   அகிலத்திற்கும் ஞானஆட்சி தரும்
   ஆற்றல் மிக்கவர்களாக மாற்றி அற்புதத்தை நடத்துவேன்
6. அன்னதனால் உலகோர் அரங்கன் கொள்கை ஏற்று
   அமைதிபட ஞானம் பயின்றால் போதும்
   வரமாக அரங்கன் தருகின்ற தர்மநெறி கொள்கையை
   வையகத்தில் பரப்பி வந்தால் போதும்

7. போதுமப்பா உலக மாற்றம்
புண்ணிய வழியில் நடந்தேறும்
ஆற்றல்பட ஆறுமுகன் இந்த அற்புதத்தை
அகிலம் வியக்க நடத்திக் காட்டுவேன்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–